**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
**எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.**
**தொலைபேசி: 044 – 22201337**
**மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in**

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 123/ந/2022
நாள்.28.09.2022

திரு.சு.சுப்பராமன்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
திருச்செந்தூர் நகராட்சி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், பக்கிள்புரம் 10/1 என்ற முகவரியில் வசிக்கும் திரு.சு.சுப்பராமன் என்பவரின் 05.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2022 அன்று பெறப்பட்டு 123/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தூத்துக்குடி மாவட்டம், பக்கிள்புரம் 10/1, என்ற முகவரியில் வசிக்கும் திரு.சு.சுப்பராமன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"குற்றச்சாட்டு 1 :– கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண். 297/3 – பரப்பு சுமார் 30 சென்ட் நத்தம் வகைப்பாடு நிலத்தில், சுற்றி காம்பவுண்டு சுவர் அமைத்து சுடலைமாடசாமி கோவில் மற்றும் காவல் தெய்வ சிலைகள் அமைத்து நூறு ஆண்டுகளுக்கு மேலாக வழிபட்டு வருகிறார்கள்.

மேற்கண்ட கோவிலுக்கு அருகில் வெயிலு கந்தம்மன் கோவில் தெருவில்தான் என்னுடைய தாயாரின் சொந்த வீடு இருந்தது. என்னுடைய வயது தற்போது 80, எனக்கு தெரிந்து 70 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கண்ட கோவில் இருக்கிறது.

திருச்செந்தூர் நகராட்சி ஆணையர், அவருடைய அறிவிப்பு ந.க.எண்.9/2022, 12.04.2022–ல் மேற்கண்ட கோவில் இருக்கும் நிலம் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமானது என்றும், கோவிலை காலி செய்ய வேண்டும் என்றும் கோவில் நிருவாகிக்கு தெரிவித்துள்ளார். மேலும் கோவிலின் நுழைவு வாயிலை மரக்கம்புகளினால் குறுக்கே அடைத்து, கோவிலின் தினசரி ஆகம பூஜைகள், பக்தர்களின் வழிபாட்டு உரிமைகளை தடுத்து விட்டார். கோவில் வளாகத்திற்கு உள்ளே அத்துமீறி நுழைந்து கோவிலின் வளாகத்திற்கு உட்புறம் கீழ்கண்ட அறிவிப்பு பலகையை வைத்துள்ளார். "இந்த இடம் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமானது".

மேற்கண்ட கோவிலில் வழிபட முடியாமல் நானும், என்னுடைய குடும்பத்தாரும் உற்றார் உறவினர்களும், பக்தர்களும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளோம். பெரும் மன உளைச்சல் ஏற்பட்டது. ஆணையரிடம் மிகவும் பணிந்து கேட்டுக்கொண்ட பிறகு, பூசாரி மட்டும் செல்வதற்கு சிறிய அளவு வாசலை திறந்து கொடுத்தார். போர்டை அகற்றுவதற்கு மறுத்துவிட்டார்.

புல எண். 297, 298 பல்வேறு நில வகைப்பாடு கொண்ட நிலம் என்பதையும், திருச்செந்தூர் நகராட்சி நிருவாகம் பெயரில் வருவாய்த்துறையின் 'அ' பதிவேட்டில் பதிவுகள் இல்லை என்பதையும் அடுத்த பக்கத்திலுள்ள 'அ' பதிவேட்டின் நகல் மூலம் நிரூபணமாகிறது.

மேற்கண்ட சுடலைமாடசாமி கோவில் நிருவாகி திருச்செந்தூர் வட்டத்தின் வருவாய் தீர்வாயம் அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேற்கண்ட விபரங்களை குறிப்பிட்டு 01.06.2022 ம் தேதி மனு கொடுத்துள்ளார். மனு பதிவு எண். 1431/2022. மேற்கண்ட கோவில் கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண்.297/3 நத்தம் என்ற வகைப்பாட்டில் கிராம கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும், திருச்செந்தூர் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட நிலம் இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் மேற்கண்ட கோவில் வாசலில் வைத்துள்ள போர்டை அகற்ற வேண்டுமென்று திருச்செந்தூர் வட்டாட்சியர் அவருடைய கடிதம் எண். 1/3434/2022, நாள் 04.06.2022 ல் தெரிவித்தார். நகராட்சி ஆணையர் போர்டை அகற்றவில்லை. வட்டாட்சியரின் ஆணையை நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி கோவில் நிருவாகம் சார்பில் உண்ணாவிரதம் அறிவித்தனர். சட்ட ஒழுங்கு பிரச்சனை ஏற்பட்டது. பொது அமைதிக்கும், அரசு நிருவாகத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டது.

மேற்கண்ட முறைகேடுகள் தொடர்பாக சென்னை நில நிருவாக ஆணையர், நகராட்சி நிருவாக இயக்குநர், கலெக்டர் ஆகியோருக்கு 22.06.2022, நாள் 18.07.2022–ல் மனு கொடுத்திருக்கிறேன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. G.O.Ms.No.114 P & A.R. Dept. dated 02.08.2006 ல் குறிப்பிட்டுள்ள ஆணைகளை பின்பற்றவில்லை. என்னுடைய மனுக்களை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புதல் சீட்டு கூட அனுப்பவில்லை.

தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் 01.07.2022–ல் மனு கொடுத்தேன். ஒப்புதல் சீட்டு கொடுத்தார். மனு எண் 2966/01.07.2022 ஒப்புதல் சீட்டில் வாக்களித்தபடி 7 தினங்களுக்குள் நடவடிக்கை எடுத்தார். நகராட்சி ஆணையர், கோவில் வளாகத்திற்குள் வைத்திருந்த போர்டையும், வாசலில் வைத்திருந்த தடுப்புக் கட்டைகளையும் அகற்றி விட்டார். எனக்கும், பக்தர்களுக்கும் சந்தோசமும், நிம்மதியும் ஏற்பட்டது. காவல்துறை உங்கள் நண்பன் என்பதை நிரூபித்தார்கள். நகராட்சி ஆணையர் பறித்த மத வழிபாட்டு உரிமையை மீட்டுக் கொடுத்துள்ளனர்.

நத்தம் வகைப்பாடு நிலம் அரசின் எந்த துறைக்கும் சொந்தமில்லை என்றும், அனுபவதாரருக்கே சொந்தம் என்றும் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. அது நன்கு தெரிந்திருந்தும் நகராட்சி ஆணையர் மேற்கண்ட குற்றச்செயலை செய்தார்.

**குற்றச்சாட்டு 2 :–** திருச்செந்தூர் நகராட்சி ஆணையரின் அறிவிப்பு ந.க.எண்.276/2022, நாள் 12.07.2022–ல் கீழ்கண்டபடி தெரிவித்துள்ளார்.

“மாண்புமிகு முதலமைச்சரின் ஆணையின்படி திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணி பகுதியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட புதிய தினசரி சந்தை கட்டிடம், புதிய நகராட்சி அலுவலகம் மற்றும் புதிய அறிவுசார் மையம் போன்ற வளர்ச்சி திட்டப்பணிகள் துவங்க உள்ளது”.

திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமில்லாத மேற்கண்ட மாட்டுத்தாவணி நிலத்தில் நகராட்சி திட்டத்திற்கான கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி கொடுத்தார்கள் என்று பொய்யாக பதிவு செய்து மாண்புமிகு முதலமைச்சருக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருக்கும், மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சருக்கும் பெரும் களங்கத்தையும், அவப் பெயரையும் ஆணையர் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். உண்மையில், நகராட்சிக்கு சொந்தமில்லாத இடத்தில் நகராட்சி கட்டடங்களை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர்கள் அனுமதி வழங்கவில்லை.

கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண் 297/1A, 298/1 ஆகியவற்றில் கண்ட நிலங்கள் கிராம / வட்ட ‘அ’ பதிவேடுகளில் மாட்டுத்தாவணி என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. திருச்செந்தூர் நகராட்சி பெயரில் பதிவு செய்யப்படவில்லை என்று திருச்செந்தூர் வட்டாட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவருடைய கடிதம் ப.மு.ஆ.1/2847/2022, நாள் 17.05.2022–ல் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட மாட்டுத்தாவணி நிலங்களை திருச்செந்தூர் நகராட்சி நிருவாகத்திற்கு நில வகை மாற்றம் செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் / நில நிருவாக ஆணையர் / அரசு செயலாளர் (வருவாய்த்துறை) ஆகியோருக்கு Revenue Standing Order 23–ன்படி இன்றுவரை ஆணையர் விண்ணப்பம்கூட அனுப்பவில்லை.

மேற்கண்ட உண்மைகளை மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் அவர்களிடம் மறைத்து, திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமில்லாத மாட்டுத்தாவணி நிலங்களில் நகராட்சி சார்பில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டடங்கள் கட்டுவதற்கு 28.03.2022–ல் அடிக்கல் நாட்ட வைத்துள்ளார். தற்போது சில கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

மேற்கண்டதைப் போன்று திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமில்லாத கீழ்கண்ட, அரசின் புறம்போக்கு நிலங்களையும் ஆணையர் தவறாக பயன்படுத்தி வருகிறார்.

கீழத்திருச்செந்தூர் கிராமம்:–
புல எண். 290, 291, 292, 293, 294, 295, 297, 298, 289/2.

திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் சுய ஆதாயத்திற்காக மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடம் கீழ்கண்ட உண்மைகளை மறைத்து ஏமாற்றி வருகிறார்.

கவுன்சிலர்கள் மேற்கண்ட அரசு புறம்போக்கு நிலங்களை திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமாக்க வேண்டும் என்று நிறைவேற்றியுள்ள 415, நாள் 25.11.2003–ன் தீர்மானத்தின்படி Revenue Standing Order 23ன் கீழ் திருச்செந்தூர் நகராட்சி பெயரில் Transfer of Classification of Land பதிவு செய்யப்படவில்லை. அரசின் அனுமதி கேட்டு நகராட்சி ஆணையர் எந்த விண்ணப்பமும் அனுப்பவில்லை.

திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமில்லாத மேற்கண்ட அரசு புறம்போக்கு நிலங்களில் நகராட்சி கட்டடங்கள் வருவாய்த் துறையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக கட்டப்படுகின்றன.

மேற்கண்ட முறைகேடுகள் பற்றி உயர்நீதிமன்றத்தில் 'ரிட்' தாக்கல் செய்யப்படும்போது மேற்கண்ட நகராட்சியின் சட்ட விரோதமான கட்டடங்களுக்கு தடை விதிப்பதற்கு வாய்ப்புள்ளது. அதனால் அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் நிலை உருவாகும்.

**குற்றச்சாட்டு 3 :–** கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண் 297/1A, 298/1 மாட்டுத்தாவணி நிலங்களில் சுமார் 200 நடைபாதை கடைகள் சுமார் 25 ஆண்டுகளாக இருக்கின்றன. கடை வியாபாரிகளிடமிருந்து நகராட்சி ஆணையர் தினசரி வாடகை வசூலித்து வருகிறார். நகராட்சி ஆணையருக்கு சொந்தமில்லாத மாட்டுத்தாவணி அரசு புறம்போக்கு நிலங்களில் உள்ள நடைபாதை கடைக்காரர்களிடமிருந்து நகராட்சி ஆணையர் வாடகை வசூலிப்பது சட்டவிரோதமாகும்.

**வேண்டுகோள்:–**

(1) அரசு மற்றும் பொது நலன் கருதி, திருச்செந்தூர் நகராட்சி ஆணையரின் சட்டவிரோதமான செயல்பாடுகளை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும்.

(2) மாண்புமிகு முதலமைச்சருக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருக்கும், மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் ஆகியோருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ள திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்புத் தொகையை கணக்கிட்டு திருச்செந்தூர் நகராட்சி ஆணையரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

(4) குற்றச்சாட்டு 1, 2 மற்றும் 3 தொடர்பாக புலத்தணிக்கை மற்றும் நகராட்சி கணக்குகளை தணிக்கை செய்யப்பட வேண்டும்.

(5) புல எண் 297/1A, 298/1 மாட்டுத்தாவணி நிலம் நடைபாதை கடைக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட தினசரி வாடகை தொகையை அரசின் வருவாய்த்துறை கணக்கில் நகராட்சி ஆணையர் செலுத்த வேண்டும்.

(6) வருவாய்த்துறை சட்ட விதிகளின்படி வருவாய்த்துறை அலுவலர்கள் மேற்கண்ட கடைக்காரர்களிடம் வாடகை வசூலிக்க வேண்டும்.

(7) குற்றச்சாட்டு 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் செயல்களுக்கு நகராட்சி ஆணையர் திரு.வேலவன் மீது தகுந்த குற்றவியல் நடைமுறைச் சட்டப்படி வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

(8) குற்றச்சாட்டு 1–ல் குற்றச்செயலை செய்து எனக்கும், பக்தர்களுக்கும் மத உரிமையை பறித்து, மன உளைச்சலை ஏற்படுத்தியதற்கு நகராட்சி ஆணையரால் தகுந்த இழப்பீடு வழங்க வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் திருச்செந்தூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் தனது 01.09.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“அரசாணை (நிலை) எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.11.1996–ல், வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சந்தைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், கண்மாய்கள், ஏரிகள், சாலைகள், மாட்டுத் தொழுவம், சாவடிகள் போன்ற பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட சொத்துக்கள், இன்னும் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகின்றன என்றும், பேரூராட்சிகளுக்கு மிகக் குறைந்த வருமானமே கிடைக்கக் கூடிய சொத்துக்களே உள்ளன என்றும், பேரூராட்சியின் வருமானத்தை அதிகரிக்க, பேரூராட்சியின் எல்லையில் அமைந்துள்ள அனைத்து சொத்துக்களையும் ஊராட்சி ஒன்றியம் பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்துருவின் அடிப்படையில், பேரூராட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியத்தால் தற்போது பராமரிக்கப்படும் சொத்துக்களை, ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பேரூராட்சிகளுக்கு பராமரிப்புக்காகவும், நிர்வாகத்திற்காகவும் உடனடியாக மாற்றம் செய்யப்படுகிறது என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் 11.03.1997 நாளிட்ட கடிதத்தில், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருந்து வரும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மாட்டுத் தாவணி நிலம் ஆகியவற்றை திருச்செந்தூர் பேரூராட்சி பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் 01.12.2003 நாளிட்ட கடிதத்தில் ஊராட்சி ஒன்றிய தீர்மானம் எண்.415, நாள்.25.11.2003ன்படி, திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில் மாட்டுத்தாவணி இடம் சர்வே எண்கள்.290, 291, 292, 293, 294, 295, 297, 298 ஆகிய இடங்களில் அமைந்துள்ளது என தெரிவித்து இதில் சர்வே எண்.293, 297 மற்றும் 298 ஆகிய பகுதிகள் திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள ஒப்படைக்கப்படாத சர்வே எண். 294–2 விஸ்தீரணம் 148.5ல் (3 ½ ஏக்கரில்) 50 செண்ட் இடம் பூமாலை திட்டத்தில் மகளிர் வணிக வளாகக் கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்டது போக, மீதமுள்ள ஒப்படைக்கப்படாத சர்வே எண்.289–2, 290–2, 291, 292, 295–2 உள்ளடக்கிய பகுதிகளை அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.11.1996 ன்படி பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் ஆவண நாள். 28.07.2014ன்படி, 293, 295, 296 மற்றும் 297 ஆகிய சர்வே எண்கள் மாட்டுத்தாவணி என்ற வகைப்பாட்டில் வருகிறது. மாட்டுத்தாவணி வகைப்பாட்டில் உள்ள இடங்கள் ஊராட்சி ஒன்றியம் மூலம் ஏற்கனவே நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது திருச்செந்தூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பின்படி, புதிய அலுவலக கட்டடம், அறிவுசார் மையம் மற்றும் தினசரி கடைகள், மேற்படி சர்வே எண்ணில் கட்டுவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

திருச்செந்தூர் நகராட்சிக்கு (முன்னாள் பேரூராட்சி) திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட நிலங்களுக்கு நகராட்சி ஆணையாளர் திருச்செந்தூர் என்ற பெயரில் நில மாற்றம் செய்வதற்கு 12.07.2022, 21.07.2022 மற்றும் 26.08.2022 ஆகிய தேதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு விண்ணப்பம் செய்யப்பட்டு கோப்பு நடவடிக்கையில் இருந்து வருகிறது.

திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமான (முன்னாள் பேரூராட்சி) ஒப்படைக்கப்பட்ட நிலத்தில் சர்வே எண்.297–ல் சுமார் 33 செண்ட் அளவுள்ள இடம், மனுதாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, வழிபாட்டு தலம் அமைத்து வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும், அவ்வாறு

ஆக்கிரமிப்பு செய்து வழிபாடு செய்து வந்த இடத்தில் எவ்வித அனுமதியும் பெறாமல் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனால் பொதுமக்கள் நலனிற்காக அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசு ஆக்கிரமிப்பு நிலங்களையும் நீர்ப்பிடிப்பு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளையும் உடனடியாக அகற்றுவதற்கு சென்னை உயர்நீதிமன்ற நீதி அரசர்களால் தமிழக அரசுக்கு உத்திரவிடப்பட்டு, தமிழகத்தில் உள்ள பல இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டது. மேற்காணும் நீதிமன்ற உத்திரவிற்கிணங்கவும், ஆக்கிரமிப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படியும், சர்வே எண்.297ல் ஆக்கிரமிப்புகள் அதிகமாகி கொண்டு இருப்பதால் இந்த இடம் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமான இடம் என்று பெயர் பலகை வைக்கப்பட்டது. மேலும், வழிபாட்டு உரிமைகளுக்கு எவ்வித தடைகலோ தடங்கலோ நகராட்சி நிர்வாகம் மூலம் செய்யவில்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்களால் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகள் நகர்ப்புர மக்களுக்கு சென்றடையும் வகையில், பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அவற்றை உடனடியாக செயல்படுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி, திருச்செந்தூர் நகராட்சி பொதுமக்கள் பயன்படும் வகையில், பொது நன்மைக்காக திருச்செந்தூர் மாட்டுத்தாவணி பகுதியில் தினசரி சந்தை கட்டடம், நகராட்சி அலுவலக கட்டடம் மற்றும் அறிவுசார் மையக் கட்டடம் போன்ற பணிகள் மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் திட்ட கருத்துரு அனுமதி பெற்று இந்நகர் மக்கள் பயன்படும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமான (முன்னாள் பேரூராட்சி) ஒப்படைக்கப்பட்ட நிலத்தில் சர்வே எண்.297–ல் வழிபாட்டு தலத்திற்காக ஆக்கிரமிப்பு செய்துள்ள கோவில் நிர்வாகத்தில் ஒருவரான திரு.சு.சுப்பராமன் என்பவர் ஒரு குறிப்பிட்ட வகுப்பை முன் நிறுத்தி, அவரின் சுய இலாபத்திற்காக கோவில் நிர்வாகத்தினரை ஒருங்கிணைத்து தூண்டுதல் செய்து சட்ட ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறார். மேலும், அரசு திட்டங்களை பொதுமக்கள் நன்மையினை கருத்தில் கொண்டு செயல்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் திரு.சு.சுப்பராமன் என்பவர் அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார்.

திருச்செந்தூர் நகராட்சி கோவில் நகரமாகவும், சுற்றுலா தலமாகவும் விளங்குகிறது. இந்நகரில் அரசால் அறிவிக்கப்படும் திட்டங்களை செயல்படுத்துவதும், இந்நகர் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதும் (பொது சுகாதாரம், குடிநீர், கழிவுநீர் மற்றும் தெருவிளக்கு) நகராட்சியின் அன்றாட கடமையாகும். மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தேவையான செலவினங்கள் இந்நகராட்சி நிதி ஆதாரங்களை கொண்டே செயல்படுத்தப்படுகிறது. இந்நகராட்சிக்கு சொந்தமான இடங்களில் போக்குவரத்திற்கு எவ்வித இடையூறும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நடைபாதை கடைகளுக்கு நகராட்சி சட்ட விதிகளின்படி, தரைவாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு நகராட்சி மூலம் வசூலிக்கப்படும் கட்டணங்கள் இந்நகர் பகுதி மக்களுக்கான அடிப்படை தேவைகளுக்கே செலவிடப்படுகிறது. இதுபோன்ற நடைமுறைகள் தமிழகத்தில் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமான (முன்னாள் பேரூராட்சி) ஒப்படைக்கப்பட்ட நிலத்தில் சர்வே எண்.297–ல் சுமார் 33 சென்ட் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள புகார் மனுதாரர் திரு.சு.சுப்பராமன் என்பவர் கூடுதலாக அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கு எத்தனித்து வருகிறார். ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தினை தன்

வசப்படுத்துவதற்காக, தன்னை சேர்ந்துள்ள சமூகத்தினை முன் நிறுத்தி சொத்தை மாற்றம் செய்வதற்கு முயற்சி செய்து வருகிறார். ஆக்கிரமிப்பு செய்துள்ள இடத்தின் மொத்த மதிப்பு ரூ 3,96,00,000/– ஆகும். நகராட்சி ஆணையாளர் என்ற முறையில் என்னுடைய பணியினை செய்யவிடாமல், அரசு நிலங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலிருந்து திசை திருப்பும் நோக்கத்துடன் கோவில் நிர்வாகத்தினரை ஒருங்கிணைத்து, தூண்டுதல் செய்து சட்ட ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி வருகிறார்.

அரசு ஆணைகளின்படி, ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்களில் ஆக்கிரமிப்பு செய்து, சட்ட ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி வரும் நபர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறையிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது வழக்கு பதிவு செய்து சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ள தனியர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அரசின் சீரிய திட்டங்களை நகராட்சி பகுதிகளில் செயல்படுத்துவதற்கு ஆவன செய்திடுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருச்செந்தூர் நகராட்சி ஆணையரும் 06.09.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 01.09.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.சு.சுப்பராமன், 06.09.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"தூத்துக்குடி மாவட்டம், கீழத்திருச்செந்தூர் கிராமம் புல எண்.297/3 – பரப்பு சுமார் 30 சென்ட் நத்தம் வகைப்பாடு நிலத்தில் சுற்றி காம்பவுண்டு சுவர் அமைத்து சுடலைமாடசாமி கோவில் மற்றும் காவல் தெய்வ சிலைகள் அமைத்து நூறு ஆண்டுகளுக்கு மேலாக அங்குள்ள மக்கள் வழிபட்டு வருகிறார்கள்.

திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் அவருடைய அறிவிப்பு எண்.9/2022, 12.04.2022–ல் மேற்கண்ட கோவில் இருக்கும் நிலம் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமானது என்றும், கோவிலை காலி செய்யவேண்டும் என்றும் தெரிவித்து, கோவிலின் நுழைவு வாயிலை மரக்கம்புகளைக் கொண்டு குறுக்கே அடைத்து, கோவிலின் தினசரி ஆகம பூஜைகள், பக்தர்களின் வழிபாட்டு உரிமைகளை தடுத்து விட்டார். கோவில் வளாகத்திற்கு உள்ளே அத்துமீறி நுழைந்து கோவிலின் வளாகத்திற்கு உட்புறம் "இந்த இடம் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமானது'' என்ற அறிவிப்பு பலகையை வைத்துள்ளார். தற்போதுவரை மேற்கண்ட பலகையை அகற்றவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் திருச்செந்தூர் நகராட்சியில், மாட்டுத் தாவணியைச் சேர்ந்த நிலத்தில் நகராட்சிக்கென கட்டடம் கட்ட நகராட்சியால் முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. மாட்டுத் தாவணியைச் சேர்ந்த 30 சென்ட் இடத்தில் நகராட்சி சொந்தம் கொண்டாட முடியாது. எனவே, மேற்கண்ட இடத்தில் நகராட்சிக்கென கட்டடம் கட்டுவதை நிறுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 6.9.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் திரு.நா.தி.வேலவன் என்பவர் 06.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்திற்கு அனுப்பியுள்ள மனுதாரரின் 16.08.2022 நாளிட்ட மனு குறித்து விளக்கமாக எனது 01.09.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருச்செந்தூர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலினையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகின்றன.

- தூத்துக்குடியை சார்ந்த மனுதாரர், திரு.சு.சுப்பராமன் தனது முறையீட்டு மனுவில் கீழத்திருச்செந்தூர் கிராமத்தில் உள்ள சுடலைமாடசாமி கோவில் இருக்கும் நிலத்தையும் மற்றும் மாட்டுத்தாவணி என்ற பெயரில் உள்ள நிலத்தினையும் திருச்செந்தூர் நகராட்சிக்கு சொந்தமானது என முறைகேடாக திருச்செந்தூர் நகராட்சி ஆணையர் அறிவித்துள்ளதை குறித்து புகாராக தெரிவித்துள்ளார்.

- தமிழ்நாட்டில் பேரூராட்சிகளுக்கு சொந்தமான சந்தைகள், பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், கண்மாய்கள், ஏரிகள், சாலைகள், மாட்டுத்தொழுவம், சாவடிகள் போன்ற பேரூராட்சியின் எல்லைக்குட்பட்ட சொத்துக்கள் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வந்ததன் காரணமாக, பேரூராட்சிகளுக்கு மிகக்குறைந்த வருமானமே கிடைக்கக்கூடிய சொத்துக்களே இருந்ததால் பேரூராட்சிகளின் வருமானத்தை அதிகரிக்க அரசானது, அரசாணை எண் (நிலை) 298, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 20.11.1996–ல் பேரூராட்சியின் ஆளுகைக்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் சொத்துக்களை ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பேரூராட்சிகளுக்கு பராமரிக்கவும் நிர்வாகத்திற்காகவும் உடனடியாக மாற்றம் செய்ய ஆணை வெளியிட்டது.

- மேற்காணும் 20.11.1996 நாளிட்ட அரசாணையின்படியும் மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவரின் குறிப்பாணை ந.க.எண்.51540/96/ப3 நாள் 07.03.1997 –ன்படியும், திருச்செந்தூர் பேரூராட்சி பகுதியிலுள்ள திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய பராமரிப்பில் இருந்து வந்த ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி ஒன்றிய மாட்டுத்தாவணி, நிலம் ஆகிய சொத்துக்களை திருச்செந்தூர் பேரூராட்சிக்கு (தற்போது நகராட்சி) 11.03.1997 அன்று (திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய கடித எண். அ2/3258/94 நாள் 11.03.1997) ஒப்படைக்கப்பட்டது என்பதை ஆவணத்தின் மூலம் அறிய முடிகிறது.

- இதனைத் தொடர்ந்து, திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கடித எண். அ2/3482/2003 நாள் 01.12.2003 மூலமாக திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியக்குழு தீர்மானம் எண். 415, நாள் 25.11.2003–ன்படி, திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில் மாட்டுத்தாவணி இடமான சர்வே எண்கள் 290, 291, 292, 293, 294,295, 297, மற்றும் 298 ஆகிய இடங்களில் சர்வே எண்.293, 297 மற்றும் 298 ஆகிய பகுதிகள் திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டதும், மீதமுள்ள ஒப்படைக்கப்படாத சர்வே எண்.294.2 விஸ்தீரணம் 148.5–ல் ( 3½ ஏக்கரில்) 50 சென்ட் இடம் பூமாலை திட்டத்தில்

மகளிர் வணிக வளாகக் கட்டடம் கட்ட தேர்வு செய்யப்பட்டது போக மீதமுள்ள ஒப்படைக்கப்படாத சர்வே எண்.289.2, 290.2, 291, 292, 295.2 உள்ளடக்கிய பகுதிகளை 20.11.1996 நாளிட்ட அரசாணையின்படி திருச்செந்தூர் பேரூராட்சி (தற்போது நகராட்சி) நிர்வாகத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்டதையும் அறிய முடிகிறது.

- இந்நிலையில் அரசாணை (நிலை) எண்.298 நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 20.11.1996–ல் வெளியிட்ட ஆணையின்படி திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மாட்டுத்தாவணி உட்பட சொத்துக்கள் அனைத்தும் திருச்செந்தூர் பேரூராட்சிக்கு (தற்போது நகராட்சி) ஒப்படைக்கப்பட்ட நிலையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரக ஆவண நாள் 28.07.2014ன்படி சர்வே எண்.293, 295, 296 மற்றும் 297 ஆகியவை மாட்டுத்தாவணி என்ற வகைப்பாட்டில் வருகின்ற சூழ்நிலையில், மேற்காணும் மாட்டுத்தாவணி வகைப்பாடு நிலத்தில் திருச்செந்தூர் நகராட்சியின் புதிய அலுவலகக் கட்டடம், அறிவுசார் மையம் மற்றும் தினசரி கடைகள் கட்டுவதற்கு அரசால் அறிவிப்பு வெளியிட்டுள்ள காரணத்தினால் அதற்கான பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக சர்வே எண்கள். 293, 294, 297 மற்றும் 298–ல் அடங்கிய இடங்களை திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் பெயரில் பட்டா மாற்றம் செய்யக் கோரி தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் மற்றும் தூத்துக்குடி வருவாய் கோட்டாட்சியருக்கும் திருச்செந்தூர் நகராட்சி மூலம் 26.08.2022 நாளிட்ட கடிதம் வாயிலாக கருத்துரு அனுப்பப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதையும் ஆவணங்களின் வாயிலாக அறியமுடிகிறது.

- இந்நிலையில் கீழத்திருச்செந்தூர் கிராமத்தில் புல எண் 297/3–ல் அமைந்துள்ள சுடலைமாடசாமி கோவிலில் பொதுமக்கள் எவ்வித தடையுமின்றியும் மற்றும் தடங்கலின்றியும் வழிபடும் வகையில் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Commissioner of Thiruchendur Municipality is directed to obtain permission from Director of Municipal Administration and the District Collector before proceeding with the construction of any structure on the Maattu Thavani land. The argument of the petitioner that the Municipality can not claim ownership over the Maattu Thavani extent does not hold in the light of the G.O.29 of MAWS Department issued in the year 1996 as discussed in the foregoing paras. The request of the Petitioner that the Municipality should not collect any tax or rent from the wayride petty shops is not fair, provided receipts are issued and the collections of this revenue are accounted for properly as per standard procedure. Nowhere this work is being done by Revenue authorities. This income strengthens the Revenue of the Local Body.

As for the Temple Land in S.No.297/3 in an extent of 30 cents, the classification of the piece is Natham and the Municipality can not claim title over the same and the Taluk Revenue authorities are the custodian of the land. Hence the Municipal Commissioner cannot do anything in the matter as the Municipality has no right to put up any board or cause inconvenience to the worshippers by way of

blocking the entry or fencing or any other restrictions. The District Collector is instructed to ensure that the entire extent of the Temple area in 30 cents is free from any encroachment by any intruders or vested interests by issuing appropriate directions to the Revenue Divisional Officer, Thiruchendur and Tahsildhar.

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.சு.சுப்பராமன்,
10/1, பக்கிள்புரம்,
தூத்துக்குடி 628 003.

2) மாவட்ட ஆட்சி தலைவர்,
தூத்துக்குடி மாவட்டம்.

3) ஆணையாளர், திருச்செந்தூர் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக

29/09/22